RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING — மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 275 | அக்டோபர்.6 2025 திங்கள்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5



## கோல்ட்ரிப் இருமல் மருந்தை குழந்தைகளுக்கு அளிக்க வேண்டாம்: அமைச்சர் ம.சுப்பிரமணியன் அறிவுறுத்தல்

சென்னை, அக்.06-

கோல்ட்ரிப் இருமல் மருந்தை குழந்தைகளுக்கு அளிக்க வேண்டாம் என்று அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிவுறுத்தியுள்ளார்.

குரோம்பேட்டை ஹோலி ஏஞ்சல்ஸ் மேல்நிலைப் பள்ளியில் நலன் காக்கும் ஸ்டாலின் திட்ட முகாம் நேற்று நடைபெற்றது. அமைச்சர்கள் தா.மோ.அன்பரசன், மா.சுப்பிரமணியன் ஆகியோர் முகாமை தொடங்கி வைத்து பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். பின்னர், முகாமில் அமைக்கப்பட்டிருந்த மருத்துவ அரங்குகளை பார்வையிட்டு பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினர்.

இதில் ஆட்சியர் சினேகா, பல்லாவரம் எம்எல்ஏ இ.கருணாநிதி, பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து துறை இயக்குநர் சோமசுந்தரம், துணை இயக்குநர் பானுமதி மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள், மருத்துவர்கள் பங்கேற்றனர்.

முகாமில் ரத்த பரிசோதனை, காசநோய், புற்றுநோய் உள்ளிட்ட பல்வேறு விதமான மருத்துவ பரிசோதனைகள் செய்யப்பட்டன. மேலும் முகாமில் பொது மருத்துவம், இதயம், எலும்பு, நரம்பியல், தோல், மகப்பேறு, குழந்தைகள், நுரையீரல், அறுவை சிகிச்சை, கண், காது மூக்கு தொண்டை, மனநலம், பல், சித்தா, இயன்முறை சிகிச்சை, கதிர் இயக்க சிகிச்சை மற்றும் சர்க்கரை நோய் உள்ளிட்ட 17 வகை மருத்துவ சேவைகள் வழங்கப்பட்டன. மேலும் முதல்வரின் மருத்துவக் காப்பீட்டு அட்டை மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கான மருத்துவ சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. நேற்றைய முகாமில் 1,000 க்கும் மேற்பட்ட வர்களுக்கு மருத்துவ சேவைகள் வழங்கப்பட்டன.

அதன் பின்னர் அமைச்சர் மா சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் கூறியதாவது: இன்னுயிர் காப்போம் திட்டத்தின் கீழ் சாலை விபத்துகளில் சிக்கி சிகிச்சை பெற்ற பயனாளிகளின் எண்ணிக்கை 4 லட்சத்தை கடந்துள்ளது.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் தயாரான இருமல் மருந்தை சாப்பிட்ட குழந்தைகள் வடமாநிலத்தில் உயிரிழந்துள்ளது தொடர்பாக குறித்து டிரக் கண்ட்ரோல் அலுவலரிடம் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. அவர் தற்போது விசாரணை செய்து வருகிறார். விசாரணை முடிந்த பின்னர் இது குறித்த விரிவான தகவல் தெரிவிக்கப்படும்.

தமிழ்நாட்டில் அந்த வகை இருமல் மருந்து விற்பனையாகி வருகிறதா என்பது குறித்தும் விசாரணை நடத்தி வருகிறோம். காலாவதியான மருந்தை உட்கொண்டதால் குழந்தைகள் உயிரிழந்திருக்கலாம் என்கிற ரீதியிலும் விசா ரணை நடைபெற்று வருகிறது. கோல்ட்ரிப் இருமல் மருந்தை குழந்தைகளுக்கு பயன்படுத்த வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. என்றார்.

## பேரவைக் கூட்ட நாட்களை முடிவு செய்ய அலுவல் ஆய்வுக்குழு அக்.13-ம் தேதி கூடுகிறது




சென்னை, அக்.06-

தமிழக சட்டப்பேரவை கூட்டம் வரும் அக்.14ம் தேதி தொடங்க உள்ள நிலையில், பேரவையை எத்தனை நாட்கள் நடத்துவது என்பது குறித்த அலுவல் ஆய்வுக்குழு கூட்டம் அக்.13ம் தேதி நடைபெறுகிறது.

தமிழக சட்டப்பேரவையின் இந்தாண்டுக்கான முதல் கூட்டம் கடந்த ஜனவரி மாதம் 6ம் தேதி தொடங்கியது. ஆளுநர் உரை மீதான விவாதம் 4 நாட்கள் நடைபெற்றன.

அதன்பின், மார்ச் 14ம் தேதி தமிழக அரசின் 2025 26ம் நிதியாண்டுக்கான பட்ஜெட், 15ம் தேதி வேளாண் பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டது. இரு பட்ஜெட்கள் மீதான விவாதம் மார்ச் 17ம் தேதி முதல் 21ம் தேதி வரை நடைபெற்றது. தொடர்ந்து கடந்த மார்ச் 24ம் தேதி துறைதோறும் மானிய கோரிக்கை விவாதம் தொடங்கி ஏப்.29ம் தேதி வரை நடைபெற்றது. இதையடுத்து, ஏப்.29ம் தேதி பேரவை மீண்டும் கூடும் தேதி குறிப்பிடப்படாமல் தள்ளிவைக்கப்பட்டது.

சட்டப்பேரவை விதிகளின்படி, ஒரு பேரவைக் கூட்டம் முடிவுற்றால் அடுத்த கூட்டம் 6 மாதங்களில் நடைபெற வேண்டும். அதன் அடிப்படையில், வரும் அக்.14ம் தேதி சட்டப்பேரவைக் கூட்டம் நடைபெறும் என பேரவைத் தலைவர் மு.அப்பாவு அறிவித்திருந்தார். அன்றைய நாள் முன்னாள் உறுப்பினர்கள் மறைவுக்கு இரங்கல் குறிப்பு வாசிக்கப்படுகிறது. அதன்படி, சமீபத்தில் மறைந்த வால்பாறை எம்எல்ஏ அமுல் கந்தசாமி மற்றும் பிரபலங்கள் மறைவுக்கு இரங்கல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, பேரவை தள்ளிவைக்கப்படும். மேலும், கூடுதல் செலவினங்களுக்கான துணை மானிய கோரிக்கை தாக்கல் செய்யப்படும் என்று பேரவைத் தலைவர் அறிவித்திருந்தார்.

இந்நிலையில், இந்த கூட்டத் தொடரை எத்தனை நாட்கள் நடத்துவது என்பது தொடர்பான அலுவல் ஆய்வுக்குழு கூட்டம் வரும் அக்.13ம் தேதி பேரவைத் தலைவர் மு.அப்பாவு தலைமையில் நடைபெறும் என தகவல் வெளியாகியுள்ளது. இக்கூட்டத்தில் எடுக்கப்படும் முடிவின்படி, பேரவை நிகழ்வுகள் நடைபெறும்.

## முதல்நிலை தேர்வு முடிந்தவுடன் விடை குறிப்புகள் வெளியிட யுபிஎஸ்சி முடிவு

புதுடெல்லி, அக்.06-

யுபிஎஸ்சி நடத்தும் சிவில் சர்வீஸ் தேர்வு நடத்துவதில் வெளிப்படைத் தன்மையை அதிகரிக்க கோரி ஹிமான்ஷு குமார் உள்ளிட்டோர் தாக்கல் செய்த மனுக்களை உச்ச நீதிமன்ற நீதிபதிகள் பி.எஸ்.நரசிம்மா, ஏ.எஸ்.சந்துருக்கர் அமர்வு விசாரித்து வருகிறது.

கடந்த மே 15ம் தேதி நடைபெற்ற விசாரணையின்போது, முதல்நிலை தேர்வு முடிந்த உடனே விடைக் குறிப்புகள் வெளியிட வேண்டும் என்று உச்ச நீதிமன்றத்துக்கு உதவ நியமிக்கப்பட்ட மூத்த வழக்குரைஞர் ஜெய்தீப் குப்தா தெரிவித்தபோது, யுபிஎஸ்சி சார்பில் ஆட்சேபம் தெரிவிக்கப்பட்டது.

இதனிடையே, இந்த விவகாரத்தை உச்ச நீதிமன்றம் நாளை மீண்டும் விசாரிக்கவுள்ள நிலையில், யுபிஎஸ்சி ஏற்கெனவே எடுத்த நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டுள்ளது. முதல்நிலை தேர்வு முடிந்த உடனே விடைக் குறிப்புகள் வெளியிடப்படும் என்று தெரிவித்துப் பிரமாண பத்திரம் தாக்கல் செய்துள்ளது.

## பிஹார் தேர்தல்: புதிய சீர்திருத்தங்களை அறிவித்த தேர்தல் ஆணையம்

பாட்னா: அக்.6-

விரைவில் நடைபெறவுள்ள பிஹார் சட்டப்பேரவைத் தேர்தலில் புதிய சீர்திருந்தங்களை நடைமுறைக்கு கொண்டு வர உள்ளதாக தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. அது குறித்து பார்ப்போம்.

பிஹார் சட்டப்பேரவையின் பதவிக் காலம் நவம்பர் 22ம் தேதியுடன் நிறைவடைகிறது. அந்த மாநிலத்தில் நவம்பரில் பேரவைத் தேர்தல் நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தேர்தல் ஆணையம் விரைவில் தேர்தலுக்கான தேதியை அறிவிக்க உள்ளது.

இந்நிலையில், ஞாயிற்றுக்கிழமை அன்று தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் பத்திரிகையாளர்களை சந்தித்தார். புதிய சீர்திருத்தங்களை பிஹார் தேர்தலில் நடைமுறைக்கு கொண்டு வருகிறோம். அதில் சில தேர்தலின் போதும், சில




வாக்கு எண்ணிக்கையின் போதும் நடைமுறைக்கு வரும்.

வாக்காளர்கள் பதிவு செய்த 15 நாட்களுக்குள் வாக்காளருக்கு கிடைப்பதை உறுதி செய்யும் எஸ்ஓபி நடைமுறை, வாக்குச் சாவடியில் மொபைல்போன்களை டெபாசிட் செய்யும் வசதி, ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் 1,200 க்கும் குறைவான வாக்காளர்கள் மட்டுமே இருப்பார்கள். இதன் மூலம் வாக்குச்சாவடிகளில் நீண்ட வரிசை தவிர்க்கப்படும். நாட்டிலேயே இது முதல்முறை. வாக்காளர் சிறப்பு சீர்திருத்தம் மற்றும் வாக்குச்சாவடிகளின் எண்ணிக்கையை கூட்டியது இதற்கு காரணமாக அமைந்துள்ளது.

முக்கியமாக மின்னணு வாக்கு பதிவு இயந்திரத்தில் வேட்பாளரின் வண்ண புகைப்படம் மற்றும் வரிசை எண்ணின் எழுத்துரு பெரியதாக இருக்கும். இந்த அம்சத்தை பெறுகின்ற முதல் மாநிலம் பிஹார் தான். வாக்குச்சாவடியில் உள்ள அலுவலர்களுக்கு அடையாள அட்டை, அனைத்து வாக்குப்பதிவு மையங்களிலும் 'வெப் காஸ்ட்டிங்' கவரேஜ் இருக்கும். இதன் மூலம் வாக்குப்பதிவு 100 சதவீதம் வெளிப்படைத்தன்மையுடன் நடைபெறும்.

வாக்கு எண்ணிக்கையின் போது படிவம் 17சி மற்றும் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தில் பதிவான வாக்குகளில் வித்தியாசம் இருந்தால் அவை அனைத்தும் மீண்டும் முழுமையாக எண்ணப்பட வேண்டும். இது ஏற்கெனவே உள்ள நடைமுறை தான். இந்தியா முழுவதும் இந்த புதிய சீர்திருத்தங்கள் நடைமுறைக்கு வரும் என அவர் தெரிவித்தார்.

## "ஆதிக்க வெறியர்களுக்கு எதிராக தமிழகம் போராடும்" ஆளுநருக்கு முதல்வர் ஸ்டாலின் பதிலடி

சென்னை: அக்.6-

"தமிழ்நாடு யாருடன் போராடும்? என ஆளுநர் கேட்டுள்ளார். இந்தி மொழியை ஏற்றால்தான், கல்வி நிதியைக் கொடுப்போம் என இருக்கும் ஆணவத் திமிருக்கு எதிராகப் போராடும்" என ஆளுநர் ரவிக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் பதிலடி கொடுத்துள்ளார்.

வள்ளலாரின் பிறந்தநாள் விழாவில் பேசிய தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி, தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் 'தமிழ்நாடு போராடும்; தமிழ்நாடு வெல்லும்' என அடிக்கடி கூறிவரும் நிலையில், தமிழ்நாடு யாருடன் போராடும்? என்று கேள்வி எழுப்பியிருந்தார்.

இந்நிலையில், இது குறித்து முதல்வர் ஸ்டாலின் தனது எக்ஸ் தளத்தில், “"தமிழ்நாடு யாருடன் போராடும்?" என ஆளுநர் கேட்டுள்ளார்ஞ் இந்தி மொழியை ஏற்றுக்கொண்டால்தான், கல்வி நிதியைக் கொடுப்போம் என இருக்கும் ஆணவத் திமிருக்கு எதிராகப் போராடும். அறிவியல் மனப்பான்மையை விதைக்கும் கல்வி நிலையங்களுக்குள் சென்று மூடநம்பிக்கைகளையும் புரட்டுக் கதைகளையும் சொல்லி, இளம் தலைமுறையை நூறாண்டு



பின்னோக்கி இழுக்கும் சதிக்கு எதிராகப் போராடும்!

உச்சி மண்டை வரை மதவெறியை ஏற்றிக்கொண்டு, எதற்கெடுத்தாலும் மதத்தைப் பிடித்துக் கொண்டு நாட்டின் வளர்ச்சியைத் தடுக்கும் தந்திரக் கும்பல்கள் தலையெடுக்காமல் போராடும். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுகளை, மக்களின் விருப்பத்திற்கு மாறாக நெருக்கும் ஜனநாயக விரோதிகளுக்கு எதிராகப் போராடும்.

ஆளுநரின் அதிகார அத்துமீறல்களுக்கு எதிராக ஒவ்வொரு முறையும் நீதிமன்றத்துக்குச் சென்று மாநில உரிமைகளை நிலைநாட்டுகிறோம். அரசியல்சட்டத்தின் மாண்பை சிறுமைப்படுத்தும் எண்ணம் கொண்டவர்களுக்கு எதிராகத் தொடர்ந்து போராடும்.

தமிழ்நாட்டுக்கு வரவேண்டிய தொழிற்சாலைகளை தொழில் வளர்ச்சியை வேலைவாய்ப்புகளை, அடுத்த மாநிலத்துக்கு மிரட்டி அழைத்துச் செல்லும் சதிகாரர்களுக்கு எதிராகப் போராடும். ஆர்.எஸ்.எஸ். ஆசியுடன் இந்திய மக்களின் ஒற்றுமையைச் சீர்குலைத்து மீண்டும் மனுதர்மத்தை நிலைநாட்டத் துடிக்கும் ஆதிக்க வெறியர்களுக்கு எதிராகப் போராடும்.

உலகத்துக்கே பொதுவான வள்ளுவருக்குக் காவிக்கறை பூசுவது முதல் கீழடியின் உண்மைகள் நிலத்துக்கடியிலேயே புதைந்துபோக வேண்டும் என்று நினைப்பது வரையிலான வன்மம் இருக்கிறதே, அதற்கு எதிராகப் போராடும். தொகுதி மறுசீரமைப்பு நடவடிக்கை மூலம் தமிழ்நாட்டின் வலிமையைக் குறைக்கும் சதிக்கு எதிராகப் போராடும். ஏகலைவனின் கட்டை விரலைக் கேட்டதுபோல் திணித்திருக்கும் நீட் எனும் பலிபீடத்துக்கு எதிராகப் போராடும்.

நாட்டையே நாசப்படுத்தினாலும், தமிழ்நாடு மட்டும் 11.19% வளர்ச்சி பெற்று, பிற மாநிலங்களுக்கு ஒளிகாட்டுகிறதே என்று நாள்தோறும் அவதூறுகளைப் பரப்பி, கலவரம் நடக்காதா என ஏங்கிக்கிடக்கும் நரிகளுக்கு எதிராகப் போராடும்.

நாகாலாந்து மக்கள் புறக்கணித்து அனுப்பிய பின்னும் திருந்தாமல், தமிழ்நாட்டு மக்களிடையே குழப்பத்தை உண்டாக்க மட்டுமே பணியாற்றும் ஆளுநருக்கு எதிராகவும் போராடும். இறுதியில் தமிழ்நாடே வெல்லும்! ஒட்டுமொத்த இந்தியாவையும் காக்கும்" இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## கரூர்: விஜய்யின் பிரச்சார வாகனம், ஓட்டுநர் மீது வழக்குப் பதிவு

கரூர், அக்.06-

கரூர் வேலாயுதம்பாளையம் காவல் நிலையத்தில் விஜய் வாகனம் மற்றும் ஓட்டுநர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

கடந்த 27ம் தேதி கரூர் வேலுசாமிபுரத்தில் தவெக தலைவர் விஜய்யின் மக்கள் சந்திப்பு நிகழ்ச்சி நடைபெற்றது. இதற்காக நாமக்கல்லில் இருந்து கரூர் வரும் வழியில் கரூர் மாவட்ட எல்லையான தளவாபாளையம் பகுதியில் விஜய்க்கு வரவேற்பு அளிக்கப்பட்டது.



அப்பொழுது அஜாக்கிரதையாக இருவர் இருசக்கர வாகனத்தை ஓட்டிச் சென்று கீழே விழுந்தனர். லேசான காயத்துடன் உயிர் தப்பினர்.

இதையடுத்து கரூர் வேலாயுதம்பாளையம் காவல் நிலையத்தில் விஜய் வாகனத்தின் ஓட்டுநர் மற்றும் வாகனம் மீதும், இருசக்கர வாகனங்கள் ஓட்டிச் சென்ற இருவர் மீதும் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

## காவல் துறை அனுமதி மறுத்ததால் பழனிசாமியின் பிரச்சார பயணம் 3வது முறையாக மாற்றம்

நாமக்கல், அக்.06-

நாமக்கல் மாவட்டத்தில் அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமியின் பிரச்சாரப் பயணம் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.



கடந்த 19, 20, 21ம் தேதிகளில் நாமக்கல் மாவட்டத்தில் பழனிசாமி சுற்றுப் பயணம் மேற்கொள்ளத் திட்டமிட்டு, கடந்த 19ம் தேதி ராசிபுரம், சேந்தமங்கலம் தொகுதிகளில் பிரச்சாரம் மேற்கொண்டார். கனமழை அறிவிப்பு காரணமாக செப். 20, 21ம் தேதிகளில் நடைபெறவிருந்த பிரச்சாரப் பயணம் அக்.4, 5ம் தேதிகளுக்கு மாற்றம் செய்யப்பட்டது. பின்னர், அக். 5, 6ம் தேதிகளுக்கு மீண்டும் மாற்றம் செய்து அதிமுக தலைமை அறிவித்தது.

அதன்படி இன்று திருச்செங்கோடு, குமாரபாளையம் தொகுதியிலும், நாளை நாமக்கல், பரமத்தி வேலூர் தொகுதியிலும் பிரச்சாரம் மேற்கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

ஆனால், பிரச்சாரத்துக்கு தேர்வு செய்யப்பட்ட 4 இடங்களும் மாநில நெடுஞ்சாலைக்கு உட்பட்ட இடங்கள் என்பதால், சென்னை உயர் நீதிமன்ற உத்தரவைக் காரணம் காட்டி பிரச்சாரத்துக்கு காவல் துறை அனுமதி மறுத்துள்ளது. இதனால், பிரச்சார தேதி 3வது முறையாக மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

அதன்படி, வரும் 8ம் தேதி திருச்செங்கோடு, குமாரபாளையத்திலும், 9ம் தேதி நாமக்கல், பரமத்தி வேலூரிலும் பழனிசாமி பிரச்சாரம் மேற்கொள்கிறார்.



# ஆட்டோ ஓட்டுநர்களுக்கு ஆண்டுக்கு ரூ.15,000: ஆந்திராவில் புதிய திட்டத்தை தொடங்கினார் முதல்வர் சந்திரபாபு

விஜயவாடா, அக்.06-

ஆந்திராவில் ஆட்டோ, டாக்ஸி, மேக்ஸி கேப் போன்ற வாடகை வாகனங்களின் ஓட்டுநர்களுக்கு ஆண்டுக்கு ரூ.15 ஆயிரம் வழங்கும் திட்டத்தை முதல்வர் சந்திரபாபு நாயுடு நேற்று விஜயவாடாவில் தொடங்கி வைத்தார்.

ஆந்திர மாநிலம் விஜயவாடாவில் 'ஆட்டோ ஓட்டுநர்களின் சேவையில்' எனும் புதிய திட்டத்தை முதல்வர் சந்திரபாபு நாயுடு நேற்று தொடங்கி வைத்தார். அப்போது அவர் பேசியதாவது:

அறிவித்ததை போலவே அறிவிக்கப்பட்ட தேதியில், இத்திட்டத்தை தொடங்கி வைப்பதில் பெரு மகிழ்ச்சி அடைகிறேன். இந்த திட்டத்தின் கீழ் மாநிலம் முழுவதிலும் ஆட்டோ, டாக்ஸி, மேக்ஸி கேப் போன்ற வாடகை வாகனங்களின் ஓட்டுநர்களுக்கு ஆண்டுக்கு ரூ.15 ஆயிரம் நிதியுதவி வழங்கப்படும். இத்தொகை அவரவர் வங்கிக் கணக்குகளில் நேரடியாக செலுத்தப்படும். இதற்காக அரசுக்கு ஆண்டுக்கு ரூ.436 கோடி செலவாகும். இதன் மூலம் 2.64 லட்சம் ஆட்டோ ஓட்டுநர்கள், 20,072 டாக்ஸி ஓட்டுநர்கள், 6,400 மேக்ஸி கேப் ஓட்டுநர்கள் என மொத்தம் 2.90 லட்சம் பேர் பயன் அடைவார்கள்.

கடந்த 2024ம் ஆண்டு தேர்தலில் எங்கள் கூட்டணிக்கு 94 சதவீத வாக்குகளை வழங்கி மக்கள் மாபெரும் வெற்றியை கொடுத்தனர். கடந்த 15 மாதங்களில் எங்களுடைய ஆட்சியில் பல நல்ல திட்டங்களை அமல்படுத்தி உள்ளோம். சூப்பர் சிக்ஸ் திட்டம் சூப்பர் ஹிட் ஆனது. ஒவ்வொரு மாதமும் ஒன்றாம் தேதியே முதியோர், மாற்றுத்திறனாளிகள், தனித்து இருக்கும் பெண்கள் மற்றும் தீராவியாதி உள்ளவர்களுக்கு நிதியுதவி வழங்கப்படுகிறது. இதற்காக ரூ.33 ஆயிரம் கோடி செலவிடப்படுகிறது. மாநிலம் முழுவதும் சாலைகளை சீரமைத்து, அரசுப் பேருந்துகளில் பெண்கள் இலவசமாக பயணம் செய்யும் திட்டத்தையும் எங்கள் அரசு அமல்படுத்தி உள்ளது. இவ்வாறு சந்திரபாபு நாயுடு பேசினார்.

விழாவுக்கு முதல்வர் சந்திரபாபு நாயுடு, துணை முதல்வர் பவன் கல்யாண், அமைச்சர்கள் லோகேஷ் உள்ளிட்டோர் ஆட்டோக்களில் வந்தனர். அவர்களுக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. அனைவரும் காக்கிச் சட்டை அணிந்து விழாவில் கலந்துகொண்டனர்.

# மணிக்கு 7,400 கிலோ மீட்டர் வேகத்தில் சீறிப் பாயும் 'த்வனி' ஹைப்பர்சோனிக் ஏவுகணை டிசம்பரில் சோதனை

புதுடெல்லி, அக்.06-

மணிக்கு 7,400 கிமீ வேகத்தில் சீறிப் பாயும் த்வனி ஏவுகணை டிசம்பரில் சோதனை செய்யப்படும் என்று தகவல்கள் வெளியாகி உள்ளன.

ஏவுகணை தொழில்நுட்பத்தில் ரஷ்யா, அமெரிக்கா, சீனா ஆகியவை முன்னோடிகளாக உள்ளன. இந்த நாடுகளுக்கு இணையாக இந்தியாவும் ஏவுகணை தொழில்நுட்பத்தில் அதிவேகமாக முன்னேறி வருகிறது. குறிப்பாக இந்தியாவின் பிரம்மோஸ் ஏவுகணைக்கு உலகம் முழுவதும் வரவேற்பு கிடைத்திருக்கிறது.



தற்போது பிரம்மோஸை விட அதிவேகமாக சீறிப் பாயும் த்வனி என்ற ஏவுகணையை மத்திய பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம் (டிஆர்டிஓ) தயாரித்து உள்ளது. இந்த ஹைப்பர்சோனிக் ஏவுகணை மணிக்கு 7,400 கி.மீ. வேகத்தில் சீறிப் பாயும் திறன் கொண்டதாகும். இதுகுறித்து டிஆர்டிஓ வட்டாரங்கள் கூறியதாவது:

ஹைப்பர்சோனிக் ஏவுகணைகள் ஒலியைவிட 5 முதல் 6 மடங்கு வேகத்தில் சீறிப் பாயும். இந்த வகை ஏவுகணை முதலில் வானத்தை நோக்கி சுமார் 100 கி.மீ. தொலைவை தாண்டி செல்லும். அதாவது வளிமண்டலத்தை தாண்டி சென்றுவிடும். பின்னர் விண்வெளியில் இருந்து பூமியை நோக்கி சீறிப் பாய்ந்து நிர்ணயிக்கப்பட்ட இலக்கை மிகத் துல்லியமாக தாக்கி அழிக்கும். ஹைப்பர்சோனிக் ஏவுகணைகளை ரேடாரில் கண்டறிவது கடினம்.

தற்போது ரஷ்யா, அமெரிக்கா, சீனாவிடம் மட்டுமே ஹைப்பர்சோனிக் ஏவுகணைகள் உள்ளன. இந்த வரிசையில் இந்தியாவும் இணைய இருக்கிறது. இந்த ஏவுகணை 9 மீட்டர் நீளம், 2.5 மீட்டர் அகலம் கொண்டதாகும். சுமார் 6,000 கி.மீ. முதல் 10,000 கி.மீ. தொலைவு வரையிலான இலக்குகளை துல்லியமாக தாக்கி அழிக்க முடியும். சர்வதேச அரங்கில் ரஷ்யாவின் அவான் கார்டு, அமெரிக்காவின் டார்க் ஈகிள், சீனாவின் டிஎப் இசட்எப் ஆகிய ஹைப்பர்சோனிக் ஏவுகணைகள் மிகவும் சக்தி வாய்ந்தவை என்று கருதப்படுகிறது. இந்த ஏவுகணைகளுக்கு இணையாக த்வனி ஏவுகணை உள்நாட்டு தொழில்நுட்பத்தில் தயாரிக்கப்பட்டு இருக்கிறது.

இதன்மூலம் எதிரிகளின் அணு ஆயுத அச்சுறுத்தல்களை திறம்பட எதிர்கொள்ள முடியும். மேலும் எதிரிகளின் போர்க்கப்பல் உட்பட எந்த இலக்கையும் துல்லியமாக தாக்கி அழிக்க முடியும். இந்த ஆண்டு இறுதிக்குள் த்வனி ஏவுகணை சோதனை செய்யப்படும். வரும் 2029ல் இந்திய ராணுவத்தில் ஏவுகணை சேர்க்கப்படும்.

அமெரிக்காவின் தாட் வான் பாதுகாப்பு கவசம், இஸ்ரேலின் அயர்ன் டோம் வான் பாதுகாப்பு கவசத்தால்கூட த்வனி ஏவுகணையை இடைமறித்து அழிக்க முடியாது. இவ்வாறு டிஆர்டிஓ வட்டாரங்கள் தெரிவித்தன.த்வனி ஏவுகணையின் மாதிரி.

# சுதர்சன சக்கர திட்டம்: ஏகே630 துப்பாக்கிகளை வாங்குகிறது இந்தியா



புதுடெல்லி, அக்.06-

சுதர்சன சக்கர திட்டத்தின் கீழ் மத்திய அரசின் 'அட்வான்ஸ்டு வெப்பன் அண்ட் எகியூப்மென்ட் இண்டியா' (ஏடயுள்யூஇஜஎல்) நிறுவனத்திடம் இருந்து 6 ஏகே630 வான் பாதுகாப்பு துப்பாக்கி அமைப்புகளை இந்திய ராணுவம் கொள்முதல் செய்ய உள்ளது. இதற்கான டெண்டரை ராணுவம் நேற்று வெளியிட்டது.

இதுகுறித்து அதிகாரிகள் கூறியதாவது: டிரோன்கள், ராக்கெட், பீரங்கி குண்டுகள் ஆகியவற்றின் அச்சுறுத்தலை எதிர்கொள்ள இந்த ஆயுதம் பயன்படுத்தப்படும். பாகிஸ்தானுடனான சர்வதேச எல்லை மற்றும் எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டுக்கு அருகில் அதிக மக்கள் வசிக்கும் பகுதிகள் மற்றும் வழிபாட்டுத் தலங்களின் பாதுகாப்புக்கு இவை பயன்படுத்தப்படும்.

இந்த வான் பாதுகாப்பு துப்பாக்கி அமைப்பானது ஒரு டிரெய்லரில் பொருத்தப்பட்டு, கனரக வாகனத்தால் இழுத்துச் செல்லப்படும். இதன் மூலம் 4 கி.மீ. தொலைவு வரையிலும் நிமிடத்திற்கு 3,000 சுற்றுகள் வரையிலும் தாக்குதல் நடத்த முடியும். அனைத்து காலநிலையிலும் இதனை பயன்படுத்த முடியும். இவ்வாறு அதிகாரிகள் தெரிவித்தனர்.

# தாம்பரம் ரெயில் நிலையத்தில் தானியங்கி பயண சீட்டு வழங்கும் இயந்திரத்தை நிரந்தர பணியாளர்கள் உள்ள பகுதியில் வைத்து இயக்கும் சென்னை கோட்ட கமர்சியல் நிர்வாத்திற்கு எதிர்ப்பு

## எஸ்.ஆர்.எம்.யு சென்னை கோட்ட செயலாளர் பால்.மேக்ஸ்வெல் ஜான்சன் தலைமையில் தொழிற்சங்கத்தினர் ஆர்பாட்டத்தில் ஈடுபட்டனர்

தாம்பரம், அக்.06-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் ரெயில் நிலையத்தில் தானியங்கி ஏடிவிஎம் இயந்திரத்தை பயணச்சீட்டு அறையில் வைத்து இயக்க எஸ்.ஆர்.எம்.யு ரெயில்வே தொழிற்சங்கத்தினர் கடும் எதிர்ப்பு, சென்னை ரெயில்வே கோட்ட கமர்சியல் நிர்வாகத்தின் போக்கால் பொது மக்களுக்கும் ரெயில்வே ஊழியர்களுக்கு பதிப்பை ஏற்படுத்தும் என கூறி இன்று எஸ்.ஆர். எம்.யு சென்னை கோட்ட செயலாளர் பால். மேக்ஸ்வெல் ஜான்சன் தலைமையில் தொழிற்சங்கத்தினர் கிழக்கு தாம்பரம் பயணச்சீட்டு வழங்கும் பகுதியில் ஆர்பாட்டத்தில் ஈடுபட்டனர்,



அப்போது செய்தியாளர்களிடம் பேசிய எஸ்.ஆர். எம்.யு சென்னை கோட்ட செயலாளர் பால்.மேக்ஸ்வெல் ஜான்சன் தீடீரென சென்னை ரெயில்வே கோட்ட கமிர்சியல் நிர்வாகத்தினர், எந்த பயிற்சியும் இல்லாத தனியார் தானியங்கி ஏடிவிஎம் இயந்திரத்தை நிரந்தர பணியாளர்கள் இருக்கும் இடத்தில் வைற்று பயணச்சீட்டு வழங்க முற்பட்டனர், இதற்கு எஸ்.ஆர்.எம்.யு பொதுச் செயலாளர் என்.கண்ணையா தலைமையில் கடும் கண்டனத்தை தெரிவித்த நிலையில் தற்போது ஆர்பட்டத்தில் ஈடுபட்டுள்ளோம், இதனால் ரெயில் பயணிகளுக்கு பாதுகாப்பு குறைபாடு ஏற்படும் அவர்களுக்கு முறையாக பயிற்சி பெற்ற பயணச்சீட்டு வழங்குபர்கள் தான் வழங்க வேண்டும், தானியங்கி இயந்திரம் தனியார் நிர்வாகத்தால் வெளிப்பகுதியில் செயல்பட்டது, இதனை அனுமதித்தால் நிரந்தர் பணியாளர்கள் குறையவும் வாய்ப்புள்ளது, இதனால் சென்னை கோட்ட ரெயில்வே அதிகாரிகளிடம் கூறியதன் பேரில் உடனடியா அந்த இயந்திரத்தை வெளியே வைத்துள்ளனர், இங்கு அமுல் படுத்த முற்பட்ட நிகழ்வு மற்ற இரயில் நிலையத்திலும் விரிவு செய்வார்கள் அதனால் எஸ்.ஆர்.எம்.யு கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளோம் என்றார்.



■ கோவை மாவட்டம் சுக்கிரவர்பேட்டை பகுதியில் உள்ள சித்தி விநாயகர் கோவிலில் தேவாங்க செட்டியார் களின் 15வது மகா சபா கூட்டம் நடைபெற்றது. இதில் காந்திப்பார்க் பால தண்டாயுத பாணி சுவாமி திருக்கோயில் அறங்காவலர் குழு தலைவர் து. பரமசிவம் சித்தி விநாயகர் கோவில் துணைத் தலைவராக போட்டியின்றி ஒரு மனதாக 7வது முறை தேர்வு செய்யப் பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. இந்நிகழ்வில் சித்தி விநாயகர் கோவில் நிர்வாகிகள்,தேவாங்க செட்டியார்கள் சங்க நிர்வாகிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர். அதனைத் தொடர்ந்து கோவை வடக்கு மாவட்ட திமுக செயலாளர் தொ.அ.ரவியிடம் வாழ்த்துக்களையும் ஆசிகளையும் பெற்று பொறுப்பேற்றுக் கொண்டார்.

# விஜய்யை அரசியலில் இருந்து வெளியேற்ற சிலர் காழ்ப்புணர்ச்சியோடு செயல்படுகிறார்கள்: கிருஷ்ணசாமி கருத்து



சென்னை, அக்.06-

'தவெக தலைவர் விஜய்யை அரசியலில் இருந்து வெளியேற்ற வேண்டும் என்று சிலர் காழ்ப்புணர்ச்சியோடு செயல்படுகிறார்கள்' என்று புதிய தமிழகம் கட்சித் தலைவர் கிருஷ்ணசாமி குற்றம்சாட்டியுள்ளார்.

சென்னை நுங்கம்பாக்கத்தில் நேற்று அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது: தமிழகத்தில் கடந்த 30 ஆண்டுகளாக, சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் ஆகிய மாவட்டங்களில் மட்டுமே பன்னாட்டு நிறுவனங்கள் அமைகின்றன. இதனால், தென் மாவட்டங்களில் இளைஞர்கள் வேலை வாய்ப்பு இல்லாமல், வாழ்வாதாரம் பாதிக்கப்படுகிறார்கள். இந்த மாவட்டங்களில் தொழிற்சாலைகள் தொடங்க தொடர்ந்து குரல் கொடுத்து வந்தோம். தற்போது, தூத்துக்குடியில் தொடங்கப்பட்டுள்ள கார் கம்பெனிகளில் 300க்கும் மேற்பட்டோர் வேலையில் அமர்ந்துள்ளனர். ஆனால், இந்த வேலையில் உள்ளூர் வாசிகள் மிகக் குறைவு.

அதேபோல் கட்டுமான நிறுவனங்களிலும் ஆந்திரா, மகாராஷ்டிரா போன்ற வெளிமாநிலங்களில் இருந்து ஆட்கள் வேலையில் அமர்த்தப்படுகிறார்கள். அவற்றில் உள்ளூர் மக்களுக்கு முன்னுரிமை அளிக்க சட்டமியற்ற வேண்டும். இவற்றை முன்வைத்து, அக்.16ம் தேதி தூத்துக்குடியில் பிரம்மாண்ட ஆர்ப்பாட்டம் நடத்த உள்ளோம். அதைத் தொடர்ந்து, போதுமான மருத்துவ வசதி ஏற்படுத்தக் கோரி விருதுநகரில் அக்.18ம் தேதி போராட்டம் நடத்தப்படும்.

வீட்டில் முடங்கக்கூடாது: கரூரில் தவெக தலைவர் விஜய் பிரச்சாரத்தின்போது 41 பேர் உயிரிழந்தது தமிழகத்தை உலுக்கி உள்ளது. இதை சாதாரணமாக எடுத்துக்கொள்ள முடியாது. இந்த நிகழ்வைப் பார்க்கும் போது, திட்டமிட்டு செய்து வருவதாகத் தெரிகிறது. ஆனால், இதை விஜய் செய்ததுபோல குற்றம்சாட்டப்படுகிறது, விஜய் யைக் கைது செய்ய வேண்டும் என்று சிலர் கூறுகின்றனர்.

இதுநடந்தது ஏப்படி என்பதை ஜனநாயகரீதியாக கண்டுபிடிக்க வேண்டுமே தவிர, அவரை அரசியலில் இருந்து வெளியேற்ற வேண்டும் என்ற காழ்ப்புணர்ச்சியோடு செயல்படக் கூடாது. விஜய் வீட்டிலேயே முடங்காமல், வெளியே வரவேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

# அகில இந்திய தொழிற்தேர்வுக்கு அக்.8க்குள் விண்ணப்பிக்கலாம்

சென்னை, அக்.06-

தமிழக வேலைவாய்ப்பு, பயிற்சித் துறை இயக்குநர் பா.விஷ்ணு சந்திரன் நேற்று வெளியிட்ட செய்திக்குறிப்பு:

கைவினைஞர் பயிற்சித் திட்டத்தின்கீழ் அகில இந்திய தொழிற்தேர்வு வரும் 2026ம் ஆண்டு ஜூலை மாதம் நடத்தப்பட உள்ளது.

இதில் தனித் தேர்வர்களாக பங்கேற்க தகுதியுள்ள நபர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. இதற்கான விண்ணப்பத்தை www.skilltraining.tn.gov.in என்ற இணையதளத்தில் பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.

விண்ணப்பத்தை பூர்த்தி செய்து, தேர்வு கட்டணம் ரூ.200 மற்றும் உரிய ஆவணங்களுடன் இணையதளத்தில் குறிப்பிட்டுள்ள மாவட்ட அரசினர் தொழிற்பயிற்சி நிலைய முதல்வரிடம் சமர்ப்பிக்க வேண்டும். அதற்கான கடைசி நாள் அக்டோபர் 8ம் தேதி. அதற்கு பிறகு வரும் விண்ணப்பங்கள் ஏற்கப்படாது.

சென்னை கிண்டி அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தில் நவ.4, 5ம் தேதிகளில் முதல்நிலைத் தேர்வின் கருத்தியல் (தியரி), செய்முறைத் தேர்வுகள் நடைபெறும். இதற்கான வழிகாட்டுதல்களை மேற்கண்ட இணையதளத்தில் அறியலாம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.



■ திருச்சிராப்பள்ளி மாவட்டம், லால்குடி வட்டம், பூவாளூர், கிராமத்தில் நேரடி கொள்முதல் நிலையத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.வே.சரவணன், நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

# டார்ஜிலிங்கில் கனமழையால் நிலச்சரிவு: 9 பேர் பலி மீட்புப் பணியில் என்டிஆர்எஃப்

டார்ஜிலிங், அக்.06-

மேற்கு வங்க மாநிலம் டார்ஜிலிங்கில் பெய்த கனமழை காரணமாக ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி 9 பேர் உயிரிழந்தனர். மேலும் பலர் மாயமாயினர். இதனால் பலி எண்ணிக்கை அதிகரிக்கக் கூடும் என அஞ்சப்படுகிறது.

கடந்த மாதம் டெல்லி, பஞ்சாப், ஜம்மு காஷ்மீர், இமாச்சலப் பிரதேசம், உத்தராகண்ட் போன்ற மாநிலங்களில் கனமழை மற்றும் நிலச்சரிவில் சிக்கி பலர் உயிரிழந்தனர். இப்போது, மேற்குவங்க மாநிலத்தில் பலத்த மழை பெய்து வருகிறது. இதனால் இமயமலையை ஒட்டி உள்ள மலைப் பிரதேசங்களான டார்ஜிலிங், கலிம்போங், கூச்பெஹார், ஜல்பைகுரி போன்ற பகுதிகளில் பலத்த மழை பெய்து வருகிறது.

இதில், டார்ஜிலிங்கில் பெய்த கனமழை காரணமாக ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி 9 பேர் உயிரிழந்தனர். இந்த நிலச்சரிவானது டார்ஜிலிங்கின் மிரிக் சுகியாபோக்ரி சாலையில் உள்ள மலைப்பாதைகளில் நிகழ்ந்துள்ளது. இதனால் போக்குவரத்து முடங்கியுள்ளது. மேலும், வீடுகள், சாலைகள் மண்ணில் புதைந்துள்ளதால் பலி எண்ணிக்கை உயரும் என்று அஞ்சப்படுகிறது. தொலைத்தொடர்பு சேவைகளும் துண்டிக்கப்பட்டுள்ளதால் பாதிப்புகள் பற்றிய மேலதிக துல்லிய விவரங்கள் வந்து சேர்வதிலும் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், டார்ஜிலிங் மாவட்ட நிர்வாக மூத்த அதிகாரி ஒருவர் அளித்தப் பேட்டியில், "மீட்பு, நிவாரணப் பணிகள் முடுக்கி விடப்பட்டுள்ளன. உள்ளூர் நிர்வாகம், காவல்துறை மற்றும் தேசிய பேரிடர் மேலாண்மைக் குழுக்கள் சம்பவ இடத்துக்கு விரைந்துள்ளன." என்றார்.

தேசிய பேரிடர் மீட்புக் குழுவினர் இதுவரை 9 இறப்புகளை உறுதி செய்துள்ளனர். இன்னும் 2 பேரை தேடி வருவதாகவும் தெரிவித்துள்ளனர்.

டார்ஜிலிங்கின் சார்ஸ்லே, ஜெஸ்பீர்கான், மிரிக் பஸ்தி, தார் கான், மிரிக் லேக் ஏரியா ஆகிய பகுதிகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன. தான் கார் பகுதியில் மட்டும் மண்ணில் புதைந்த 4 பேர் மீட்கப்பட்டனர்.


ரெட் அலர்ட்: இதற்கிடையில், மேற்கு வங்கம், டார்ஜிலிங், கலிம்பாங் ஆகிய பகுதிகளில் இன்று (அக்.6) வரை அதிகனமழைக்கான வாய்ப்புள்ளதாக இந்திய வானிலை ஆய்வு மையம் ரெட் அலர்ட் விடுத்துள்ளது. அதேபோல் இன்னும் பல இடங்களில் நிலச்சரிவுகள் ஏற்படவும் வாய்ப்புள்ளதாகவும் கணித்துள்ளது.

தசரா விடுமுறையை ஒட்டி டார்ஜிலிங்குக்கு சுற்றுலாப் பயணிகள் ஏராளமானோர் வந்திருந்த நிலையில் நிலச்சரிவால் அவர்கள் சொந்த ஊர்களுக்குச் செல்வதிலும் சிரமம் ஏற்பட்டுள்ளது. அவர்களின் உதவிக்காக காவல் கட்டுப்பாட்டு அறை 91478 89078 என்ற தொடர்பு எண்ணை அறிவித்துள்ளது.

பிரதமர் மோடி இரங்கல்: இந்நிலையில், டார்ஜிலிங் நிலச்சரிவில் உயிரிழந்தோருக்கு பிரதமர் மோடி இரங்கல் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் தனது எக்ஸ் பக்கத்தில் பகிர்ந்த பதிவில், "டார்ஜிலிங் நிலச்சரிவில் பலர் உயிரிழந்திருப்பது வருத்தமளிக்கிறது. தங்கள் அன்புக்குரியவர்களை இழந்து வாடும் அனைவருக்கும் இரங்கலை தெரிவித்துக் கொள்கிறேன். காயமடைந்தவர்கள் விரைந்து குணமாகட்டும்.

கனமழை, நிலச்சரிவுகளால் பாதிக்கப்பட்டுள்ள டார்ஜிலிங் மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் உள்ள கள நிலவரம் பற்றி உன்னிப்பாகக் கவனித்து வருகிறோம். பாதிக்கப்பட்டவர்களுக்கு அனைத்து உதவியையும் வழங்க நாங்கள் கடமைப்பட்டிருக்கிறோம்." என்று தெரிவித்துள்ளார்.

# சர்வேயர், வரைவாளர் பதவிகளுக்கு அக்.13ம் தேதி 5வது கட்ட கலந்தாய்வு: டிஎன்பிஎஸ்சி அறிவிப்பு



சென்னை, அக்.06-
டிஎன்பிஎஸ்சி செயலாளர் எஸ்.கோபால சுந்தர ராஜ் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:
தமிழ்நாடு நிலஅளவை பதிவேடுகள் சார்நிலை பணியில் அடங்கிய நிலஅளவர் (சர்வேயர்), வரைவாளர் பதவிகளில் உள்ள காலியிடங்களை நிரப்புவதற்கான 5வது கட்ட சான்றிதழ் சரிபார்ப்பு மற்றும் கலந்தாய்வு அக்டோபர் 13ம் தேதி நடைபெற உள்ளது. இதற்கு அனுமதிக்கப்பட்டுள்ள தேர்வர்களின் பதிவெண்கள் அடங்கிய பட்டியல் தேர்வாணையத்தின் இணையதளத்தில் (ஷ்ஷ்ஷ்.மீஸீஜீ ஜ.ரீஷீஸ்.வீஸீ) வெளியிடப்பட்டுள்ளது.
இதுகுறித்து சம்பந்தப்பட்ட தேர்வர்களுக்கு மட்டும் குறுஞ்செய்தி மற்றும் மின்னஞ்சல் வாயிலாக தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவர்கள் அழைப்பாணையை தேர்வாணையத்தின் இணையதளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்துகொள்ள வேண்டும். அழைப்பாணை தபால் மூலம் அனுப்பப்பட மாட்டாது. சான்றிதழ் சரிபார்ப்புக்கு அழைக்கப்படும் அனைத்து தேர்வர்களும் கலந்தாய்வுக்கு அனுமதிக்கப்பட்டு, பணிக்கு தேர்வு செய்யப்படுவர் என்பதற்கு உறுதி அளிக்க இயலாது,. குறிப்பிட்ட நாள் மற்றும் நேரத்தில் சான்றிதழ் சரிபார்ப்பில் கலந்துகொள்ள தவறினால் மறுவாய்ப்பு வழங்கப்பட மாட்டாது. இவ்வாறு அவர் கூறியுள்ளார்.
கீ ஆன்ஸர் வெளியீடு:
ஒருங்கிணைந்த தொழில்நுட்ப பணிகள் தேர்வு (டிப்ளமா மற்றும் ஐடிஐ கல்வித் தகுதி) தொடர்பாக டிஎன்பிஎஸ்சி தேர்வு கட்டுப்பாட்டு அலுவலர் ஏ.சண்முகசுந்தரம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், 'ஒருங்கிணைந்த தொழில்நுட்ப பணிகளில் (டிப்ளமா மற்றும் ஐடிஐ ) அடங்கிய பதவிகளில் உள்ள காலியிடங்களை நிரப்புவதற்கான தேர்வுகள் ஆகஸ்ட் 31 மற்றும் செப்டம்பர் 7 முதல் 27ம் தேதி வரை வெவ்வேறு நாட்களில் நடத்தப்பட்டன.
அதில் ஓஎம்ஆர் வகை தேர்வாக ஆகஸ்ட் 31ம் தேதி நடைபெற்ற தமிழ் தகுதித்தேர்வு, திறனறிவு மற்றும் மனக்கணக்கு நுண்ணறிவு தேர்வுக்கான உத்தேச விடைகள் (கீ ஆன்ஸர்) தேர்வாணையத்தின் இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளன. மேல்முறையீடு செய்ய விரும்பும் தேர்வர்கள், அக்டோபர் 7ம் தேதி மாலை 5.45 மணிக்குள் தேர்வாணையத்தின் இணையதளத்தின் மூலம் ஆன்லைனில் முறையீடு செய்யலாம். அஞ்சல் மற்றும் மின்னஞ்சல் வழியாக பெறப்படும் முறையீடுகள் ஏற்கப்படாது' என தெரிவித்துள்ளார்.

# குண்டுவீச்சை நிறுத்துமாறு டிரம்ப் கூறிய பிறகு இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் காசாவில் 6 பேர் உயிரிழப்பு



ஜெருசலேம், அக்.06-
இஸ்ரேல் ஹமாஸ் போரை முடிவுக்கு கொண்டுவரும் முயற்சியாக அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் 20 அம்ச அமைதி திட்டத்தை அறிவித்தார். இதை ஏற்பதாக இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு அறிவித்தார். எனினும் ஹமாஸ் அமைதி காத்ததால் அதற்கு ட்ரம்ப் 3 நாள் கெடு விதித்தார்.
இந்நிலையில் அமைதிக்கு ஹமாஸ் தயாராக இருப்பதாகவும் பிணைக்கைதிகளை விடுவிக்க ஒப்புக்கொண்டுள்ளதாகவும் பிற நிபந்தனைகள் சிலவற்றை ஏற்றுக்கொண்டுள்ளதாகவும் ட்ரம்ப் அறிவித்தார். மேலும் காசா மீது குண்டுவீச்சை நிறுத்துமாறு இஸ்ரேலை கேட்டுக்கொண்டார். இந்நிலையில் ட்ரம்பின் இந்த அறிவுரைக்கு அடுத்த சில மணி நேரத்தில் காசாவில் இஸ்ரேலிய துப்பாக்கிச் சூட்டில் 6 பேர் கொல்லப்பட்டதாக உள்ளூர் அதிகாரிகள் தெரிவித்தனர்.
முன்னதாக ஹமாஸின் ஒப்புதலை தொடர்ந்து இஸ்ரேலிய பிரதமர் நெதன்யாகுவின் அலுவலகம் நேற்று அதிகாலை, "இஸ்ரேலிய பிணைக் கைதிகளை விடுவிப்பதற்கான ட்ரம்ப் அமைதி திட்டத்தின் முதல் கட்டத்தை செயல்படுத்த இஸ்ரேல் தயாராகி வருகிறது'' என அறிவித்தது.
மேலும் காசாவில் தாக்குதலை குறைக்க ராணுவத்துக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக இஸ்ரேலிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

# கரூர் துயரம்: சைபர் க்ரைம், தனிப்படை அதிகாரிகளிடம் சிறப்பு புலனாய்வுக் குழு விசாரணை



கரூர், அக்.06-
கரூர் தவெக பிரச்சாரக் கூட்டத்தில் 41 பேர் உயிரிழந்த வழக்கு விசாரணைக்காக அமைக்கப்பட்ட அஸ்ரா கார்க் ஐபிஎஸ் தலைமையிலான சிறப்பு புலனாய்வுக் குழு நேற்று (அக்5ம் தேதி) விசாரணையைத் தொடங்கியது.
சம்பவம் நடந்த வேலுச்சாமிபுரத்தில் 45 நிமிடங்கள் சிறப்பு புலனாய்வு குழுவினர் விசாரணை மேற்கொண்டனர்.
பின்னர் செய்தியாளர்களை சந்தித்த ஐ ஜி அஸ்ராக் காரக், "நீதிமன்ற உத்தரவுப்படி முதல் கட்ட விசாரணையை இன்று தொடங்கியுள்ளோம். விசாரணை நடந்து வருகிறது. இந்தக் குழுவில் இரண்டு டிஎஸ்பிக்கள், இரண்டு எஸ்பிக்கள், 5 ஆய்வாளர்கள் உள்ளனர். விசாரணையை இப்போது தான் தொடங்கினோம் என்பதால் வேறு விவரங்கள் ஏதும் தெரிவிக்க இயலாது.'' என்றார்.
முதற்கட்டமாக கரூர் சைபர் க்ரைம் உதவி ஆய்வாளர் சுதர்சன், கரூர் தனிப் படை காவலர் மோகன் ஆகியோர் நடந்த சம்பவம் குறித்து சிறப்பு புலனாய்வு குழுவினரிடம் தெரிவித்தனர். பின்னர், முதல்கட்ட விசாரணையை முடித்து விட்டு சிறப்பு புலனாய்வு குழுவினர் புறப்பட்டனர்.
கரூர் விபத்தும், விசாரணைக் குழு அமைப்பும்: கரூர் வேலுசாமிபுரத்தில் கடந்த செப்.27ம் தேதி நடந்த தவெக பிரச்சாரக் கூட்டத்தில் நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்தனர். 116 பேர் காயமடைந்தனர். இச்சம்பவத்தில் அன்றைய தினம் இரவே தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கரூர் வந்து உயிரிழந்தவர்கள் உடலுக்கு அஞ்சலி செலுத்தி அவர்கள் குடும்பத்தினர் மற்றும் காயமடைந்தவர்களை சந்தித்து ஆறுதல் கூறி நிவாரண நிதியை அறிவித்துச் சென்றார்.
இது தொடர்பாக ஓய்வுபெற்ற நீதிபதி அருணா ஜெகதீசன் தலைமையில் ஒரு நபர் விசாரணை ஆணையம் அமைக்கப்பட்டு அவர் சம்பவம் நடந்த வேலுசாமிபுரம், கரூர் அரசு மருத்துவக் கல்லூரியில் சிகிச்சை பெற்று வந்தவர்கள், உயிரிழந்தர்கள் குடும்பங்களை சந்தித்து 2 நாட்கள் விசாரணை நடத்தினார்.
இதுதொடர்பாக கரூர் நகர போலீஸார் தவெக கரூர் மேற்கு மாவட்ட செயலாளர் வி.பி.மதியழகன், பொதுச் செயலாளர் புஸ்ஸி என்.ஆனந்த், மாநில இணைச் செயலாளர் சிடிஆர். நிர்மல்குமார் ஆகியோர் மீது வழக்குப் பதிவு செய்தனர். மேலும் மேற்கு மாவட்டச் செயலாளர் வி.பி.மதியழகன், மற்றொரு நிர்வாகி பவுன்ராஜ் ஆகியோரை கைது செய்தனர். மேலும் தலைமறைவான பொதுச்செயலாளர் புஸ்ஸி என்.ஆனந்த், மாநில இணைச் செயலாளர் நிர்மல்குமார் ஆகியோரை பிடிக்க தனிப்படை அமைக்கப்பட்டுள்ளது.
இந்நிலையில் உயர் நீதிமன்றம் இவ்வழக்கை விசாரிக்க சிறப்பு புலனாய்வுக் குழுவை அமைக்க உத்தரவிட்ட நிலையில் தமிழக அரசு வடக்கு மண்டல ஐஜி அஸ்ரா கார்க் தலைமையில் சிறப்பு புலனாய்வுக் குழுவை அமைத்தது.

# பாஜகவுடன் விஜய் கட்சி மறைமுகக் கூட்டணியா? - நயினார் நாகேந்திரன் விளக்கம்



சென்னை, அக்.06-
பாஜகவுடன் விஜய் மறைமுக கூட்டணி வைத்திருப்பதாக வெளியாகும் தகவல்கள் அனைத்தும் திமுக செய்யும் சதி என தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.
சென்னை கோபாலபுரத்தில் அமைந்துள்ள காதி பவனில் சுதேசி பொருட்களை ஊக்குவிக்கும் வகையில் பாஜக மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் காதிப் பொருட்களை வாங்கினார். இதையடுத்து செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது:
மணிப்பூர், குஜராத், கும்பமேளாவுக்கு அனுப்பாத மத்திய குழுவை தமிழகத்துக்கு மட்டும் பாஜக அரசு அனுப்புகிறது என முதல்வர் கேள்வி எழுப்பியிருக்கிறார். கரூருக்கு விஜய் வரும்போது ஏன் மின்சாரம் தடைபட்டது, தவெகவினர் கேட்ட இடத்தில் ஏன் அனுமதி வழங்க வில்லை, ஒரு அரசியல் கட்சி தலைவர் வரும்போது மின் விளக்குகளை அனைப்பதும், தடியடி நடத்துவதும், செருப்பை வீசுவதையும் முதல்வர் அனுமதிக்கிறாரா, சம்பவம் நடந்த அரை மணி நேரத்தில் முதல்வரால் எப்படி அங்கு புறப்பட்டு வர முடிந்தது?
இரவோடு இரவாக 40 உடல்களுக்கு பிரேத பரிசோதனை செய்தது எப்படி, இந்த கேள்விகளுக்கு பதில் அளிப்பாரா ஸ்டாலின். மற்ற மாநிலங்களில் உயிரிழப்பு நடந்திருக்கிறது. அங்கெல்லாம் செல்லாமல், இங்கு மட்டும் குழு வருகிறது என பேசும் முதல்வர் ஸ்டாலின், 41 உயிரிழப்புகளும் சாதாரணமானது என்கிறாரா, முதல்வர் இந்த உயிரிழப்புகளை ஒப்பிட்டு பேசுவது ஆச்சரியமாகவும், பரிதாபமாகவும் இருக்கிறது.
தவறு செய்தவர்களை காப்பாற்றுவதற்கு நாங்கள் ஒன்றும் நீதிமன்றம் கிடையாது. அரசியல் கட்சி வைத்திருக்கிறோம் அவ்வளவுதான். நீதிமன்றம் சில நேரமையான தீர்ப்புகளையும் வழங்க வேண்டும். பாஜகவுடன் விஜய் மறைமுக கூட்டணி வைத்திருப்பதாக வெளியாகும் தகவல்கள் அனைத்தும் திமுக செய்யும் சதி. ஏனென்றால் திமுக இன்று மக்களின் வெகுஜன விரோதியாக மாறியிருக்கிறது. மக்களின் நன்மதிப்பை பெரிதும் இழந்துள்ளது.
இந்த நேரத்தில் திமுக ஒரு இடத்திலாவது டெபாசிட் வாங்குவார்களா என்பது தெரியவில்லை. 2011ல் மிகப்பெரிய கூட்டணியை கருணாநிதி வைத்திருந்தார். ஆனால், அன்று ஜெயலலிதா தான் வெற்றி பெற்றார். கூட்டணி பலத்துடன் இருக்கிறோம் என்ற மாயையை திமுக உருவாக்கி வைத்துள்ளது. அந்த மாயை 2026ல் மக்கள் முறியடிப்பார்கள். இவ்வாறு அவர் கூறினார்.
சுற்றுப்பயணம்: சட்டப்பேரவை தேர்தலையொட்டி, தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் தமிழகம் முழுவதும் சுற்றுப்பயணம் மேற்கொள்கிறார். இந்த பயணத்தை வரும் 2ம் தேதி மதுரையில் தொடங்குகிறார். தொடக்க நிகழ்வில் பாஜக தேசிய தலைவர் ஜெ.பி.நட்டா பங்கேற்கிறார்.

# வாழ்வாதாரத்தை உறுதி செய்ய முடியாததால் 1,968 விவசாயிகள் தற்கொலை: அன்புமணி விமர்சனம்



சென்னை, அக்.06-
'திமுக ஆட்சிக்கு வந்த 3 ஆண்டுகளில் 1,968 விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டுள்ளனர்' என்று பாமக தலைவர் அன்புமணி தெரிவித்துள்ளார்.
இதுதொடர்பாக நேற்று அவர் வெளியிட்ட அறிக்கை: நாடு முழுவதும் 2023ம் ஆண்டுக்கான தற்கொலைகள் மற்றும் விபத்து உயிரிழப்புகள் குறித்த புள்ளிவிவரங்களை தேசிய குற்ற ஆவணக் காப்பகம் வெளியிட்டுள்ளது. இதில், தமிழகத்தில் மொத்தம் 19,483 பேர் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். 22,686 பேர் தற்கொலை செய்துகொண்ட மராட்டியத்துக்கு அடுத்தப்படியாக அதிக தற்கொலைகள் நிகழும் மாநிலம் தமிழகம் தான்.
விவசாயிகள் வாழ வழியற்ற மாநிலமாக தமிழகம் திகழ்வதையே இது காட்டுகிறது. இதற்கு முன் 2022ம் ஆண்டில் 738 விவசாயிகளும், 2021ம் ஆண்டில் 599 விவசாயிகளும் தற்கொலை செய்து கொண்டிருக்கின்றனர். திமுக ஆட்சிக்கு வந்த 3 ஆண்டுகளில் 1,968 விவசாயிகள் தற்கொலை செயது கொண்டுள்ளனர்.
விவசாயிகளின் தற்கொலைகளுக்கு பல காரணங்கள் இருக்கலாம். ஆனால், அவற்றில் முதன்மையானது விவசாயிகளால் வாழ்வாதாரத்தை உறுதி செய்ய முடியாததுதான். அதுகுறித்த எந்தக் கவலையும் இல்லாத திமுக அரசுக்கு மக்கள் பாடம் புகட்டுவார்கள். இவ்வாறு தெரிவித்துள்ளார்.

# முதல்நிலை தேர்வு முடிந்தவுடன் விடை குறிப்புகள் வெளியிட யுபிஎஸ்சி முடிவு

புதுடெல்லி, அக்.06-
யுபிஎஸ்சி நடத்தும் சிவில் சர்வீஸ் தேர்வு நடத்துவதில் வெளிப்படைத் தன்மையை அதிகரிக்க கோரி ஹிமான்ஷு குமார் உள்ளிட்டோர் தாக்கல் செய்த மனுக்களை உச்ச நீதிமன்ற நீதிபதிகள் பி.எஸ்.நரசிம்மா, ஏ.எஸ்.சந்துருக்கர் அமர்வு விசாரித்து வருகிறது.




கடந்த மே 15ம் தேதி நடைபெற்ற விசாரணையின்போது, முதல்நிலை தேர்வு முடிந்த உடனே விடைக் குறிப்புகள் வெளியிட வேண்டும் என உச்ச நீதிமன்றத்துக்கு உதவ நியமிக்கப்பட்ட மூத்த வழக்குரைஞர் ஜெய்தீப் குப்தா தெரிவித்தபோது, யுபிஎஸ்சி சார்பில் ஆட்சேபம் தெரிவிக்கப்பட்டது.
இதனிடையே, இந்த விவகாரத்தை உச்ச நீதிமன்றம் நாளை மீண்டும் விசாரிக்கவுள்ள நிலையில், யுபிஎஸ்சி ஏற்கெனவே எடுத்த நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டுள்ளது. முதல்நிலை தேர்வு முடிந்த உடனே விடைக் குறிப்புகள் வெளியிடப்படும் என்று தெரிவித்துப் பிரமாண பத்திரம் தாக்கல் செய்துள்ளது.




# சிங்கம் மாயமானதாக வெளியான தகவலுக்கு வண்டலூர் உயிரியல் பூங்கா நிர்வாகம் மறுப்பு

சென்னை, அக்.06-
சென்னை வண்டலூர் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில் சிங்கம் மாயமானதாக வெளியான தகவலுக்கு பூங்கா நிர்வாகம் மறுப்பு தெரிவித்துள்ளது. லயன் சஃபாரி பகுதியில் விடப்பட்ட சிங்கம் உணவுக்கு திரும்பி வராததால் காணாமல் போனதாக தகவல் பரவியதாகவும் ஆனால் உலாவிடத்தில் சிங்கம் இருப்பதை ஊழியர்கள் கண்டறிந்துள்ளதாகவும் பூங்கா நிர்வாகத்தினர் தகவல் தெரிவித்துள்ளனர்.



# சபரிமலை ஐயப்பன் கோயிலில் தங்கம் மாயமான சர்ச்சை: விஜய் மல்லையா வழங்கிய தங்கத்தில் செம்பு கலப்பா?

பத்தனம்திட்டா, அக்.06-
சபரிமலை ஐயப்பன் கோயில் தங்கம் மாயமான விவகாரத்தில், விஜய் மல்லையா நன்கொடையாக வழங்கியது தங்கத் தகடுகள் அல்ல; செம்பு கலக்கப்பட்டவை என்று தகவல் வெளியாகி உள்ளது.
கேரளாவில் உள்ள சபரிமலை ஐயப்பன் கோயில் கருவறையின் வெளிப்புறம் மற்றும் பீடத்துடன் கூடிய 2 துவாரபாலகர் சிலைகளுக்கு கடந்த 1999 ம் ஆண்டு தங்கத் தகடுகள் பொருத்தப்பட்டன. இதற்கு முன்னாள் தொழிலதிபர் விஜய் மல்லையா நன்கொடையாக வழங்கிய 30 கிலோ தங்கம் பயன்படுத்தப்பட்டது. இந்த நிலையில், 2 துவாரபாலகர் சிலைகள் மற்றும் அதன் பீடத்தின் மீது உள்ள தகடுகளுக்கு தங்க முலாம் பூசும் பணி பெங்களூரு தொழிலதிபர் உன்னிகிருஷ்னன் போற்றியிடம் தரப்பட்டது.
பணி முடிந்த பிறகு, சென்னையில் உள்ள பிரபல நடிகர் ஜெயராம் வீட்டுக்கு அந்த தகடுகளை கொண்டு சென்று பூஜை போட்டுள்ளனர். அப்போது ஜெயராம் தட்சிணையாக பணம் கொடுத்துள்ளார். பின்னர் தங்க முலாம் பூசிய தகட்டை கோயில் நிர்வாகத்திடம் ஒப்படைத்துள்ளனர். இதற்கிடையே, 42.8 கிலோவாக இருந்த தகடுகளில் 4 கிலோ தங்கம் மாயமானதாக கூறப்படுகிறது.
இதுகுறித்து உன்னிகிருஷ்ணன் போற்றி கூறும்போது, "துவாரபாலகர் சிலைகள் பராமரிப்புக்காக கொடுக்கப்பட்டபோது என்னிடம் கொடுத்த ஆவணத்தில் செம்பால் ஆன தகடுகள் என்றுதான் குறிப்பிடப்பட்டுள்ளது. ஒருவேளை தங்க முலாம் தேய்ந்து போய் இருக்கலாம். அதனால் திருவாங்கூர் தேவசம் போர்டு தங்க முலாம் பூச முடிவு செய்திருக்கலாம்'' என்றார்.
நடிகர் ஜெயராம் கூறும்போது, ''சென்னையில் உள்ள தொழிற்சாலையில் 'எலெக்ட்ரோ பிளேட்டிங்' பணிக்காக தங்கத் தகடுகள் கொடுக்கப்பட்டுள்ளதாக உன்னிகிருஷ்ணன் என்னிடம் கூறினார். உடனே நண்பர்களுடன் சென்று பார்வையிட்டேன். கோயிலுக்கு அனுப்பி வைப்பதற்கு முன்பு எனது வீட்டில் சிறிது நேரம் வைத்து பூஜை செய்ய முடியுமா என்று கேட்டேன். அவரும் ஒப்புக்கொண்டதால், சபரிமலை கோயில் தங்கத் தகடுகளை என் வீட்டுக்கு கொண்டு வந்து பூஜை செய்தனர். உடனடியாக கோயிலுக்கும் அனுப்பி வைத்தனர். இதற்காக, உன்னிகிருஷ்ணனுக்கு நான் பணம் எதுவும் தரவில்லை'' என்றார்.






# சிவகாசி அருகே பட்டாசுக் கடையில் விபத்து: பல லட்சம் மதிப்பிலான பட்டாசுகள் சேதம்

சிவகாசி, அக்.06-
சிவகாசி அருகே அனுப்பங்குளத்தில் உள்ள சி.எஸ்.கே பட்டாசு கடையில் ஞாயிறு காலை ஏற்பட்ட வெடி விபத்தில் பல லட்சம் மதிப்பிலான பட்டாசுகள் வீணானது.
சிவகாசி சிரசம் லைன் பகுதியைச் சேர்ந்தவர் கார்த்திகேயன் (28). இவர் சிவகாசி சாத்தூர் சாலையில் அனுப்பன்குளம் அருகே மயிலாடுதுறை கிராமத்தில் சி.எஸ்.கே கிராக்கர்ஸ் என்ற பெயரில் பட்டாசுக் கடை நடத்தி வருகிறார். ஞாயிறு காலை வழக்கம் போல் கடையைத் திறந்து தொழிலாளர்கள் விற்பனையில் ஈடுபட்டனர்.
காலை 11 மணி அளவில் பட்டாசுக் கடையில் திடீர் தீ விபத்து ஏற்பட்டது. கடையில் இருந்தவர்கள் உடனடியாக வெளியேறினர். சிறிது நேரத்தில் பட்டாசுகள் அனைத்தும் பயங்கர சத்தத்துடன் வெடிக்கத் தொடங்கியது. தகவலறிந்து 3 வாகனங்களில் வந்த சிவகாசி தீயணைப்புத் துறையினர் ஒரு மணி நேரம் போராடி தீயை அணைத்தனர்.
சாலை ஓரத்தில் கடை உள்ளதால் சிவகாசி சாத்தூர் சாலையில் ஒரு மணி நேரம் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. விபத்துக்கான காரணம் குறித்து சிவகாசி கிழக்கு போலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.



# புகழ்பெற்ற ஸ்ரீபுரம் ஸ்ரீநாராயணி மருத்துவமனை சார்பில் உலக இதய நாள் மற்றும் மருத்துவமனையின் 21ம் ஆண்டு விழா

வேலூர், அக்.06-

வேலூர் மாவட்டம், வேலூர் திருமலைக்கோடி, புகழ்பெற்ற வேலூர் ஸ்ரீ புரம் ஸ்ரீ நாராயணி மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி மையம் சார்பாக உலக இதய நாள் மற்றும் மருத்துவமனையின் 21ஆம் ஆண்டு விழா சிறப்பாக ஸ்ரீநாராயணி மஹாலில் சிறப்பாக நடைபெற்றது. இவ்விழாவிற்கு முதன்மை அழைப்பாளராக ஸ்ரீநாராயணி கல்வி குழுமத்தின் இயக்குனர் பாலாஜி அவர்கள் கலந்து கொண்டு குத்து விளக்கு ஏற்றி விழாவை துவக்கி வைத்து அனைவரையும் வரவேற்று சிறப்புரை யாற்றினார். சிறப்பு அழைப்பாளர்களாக திரைப்பட நடிகர் இயக்குனர் வெங்கட்பிரபு திரைப்பட நடிகை மிருணாளினிரவி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள். இவ்விழாவில் சிறப்பு விருந்தினர்கள் பேராசிரியர்கள் மருத்துவர்கள் பணியா ளர்கள் மாணவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். இதில் இயக்குனர் வெங்கட் பிரபு பேசியதவது: மனிதனுக்கு நோய் நொடி இல்லாமல் நலமுடன் வாழ வேண்டும் என்றால் நடைப்பயிற்சி, யோகா பயிற்சி, சரியான உணவுகளை சரியாக பின்பற்ற வேண்டும் யாருடனும் மன வேதனை இல்லாமல் சந்தோஷமாக வாழ்ந்தால் எந்த நோய் நொடியும் மனிதனுக்கு வராது என்பதை அனைவரும் மனதிலும் பதியும்படி சிறப்புரையாற்றினார்.



# வேலூர் திருப்பதி தேவஸ்தானத்தில் புரட்டாசி மாத 3-ம் சனிக்கிழமை முன்னிட்டு அன்னதான விழா

வேலூர், அக்.06-

வேலூர் மாவட்டம், வேலூர், சங்கரன் பாளையம், மாப்பிள்ளை ஓட்டல் ராஜகுரு குடும்பத்தினர் சார்பில், பெருமாளுக்கு உகந்த மாதமான, புரட்டாசி மாதம் 3ஆம் சனிக்கிழமை முன்னிட்டு வேலூர் திருப்பதி தேவஸ்தானத்தில், அலங்காரத்துடன் சிறப்பு பூஜைகள் செய்து, பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கினர். இதில் திரளான உள்ளூர் மற்றும் வெளியூர் பக்தர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

# தாம்பரம் சானிட்டோரியத்தில் உள்ள ஸ்ரீ வக்ரகாளியம்மன் ஆலயத்தில் நவக்கிரஹ நாயகி நவராத்திரி திருவிழா

தாம்பரம், அக்.06-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரத்தில் ஸ்ரீ வக்ரகாளியம்மன் ஆலயத்தில் நவக்கிரஹ நாயகிக்கு நவராத்திரி திருவிழா நடைபெற்றது இதில் அம்மனுக்கு ஊஞ்சல் சேவை மற்றும் சுமங்கலி பூஜை, கன்னியா பூஜை ஆகியவை நடத்தப்பட்டது தொடர்ந்து விஜயதசமி முன்னிட்டு புத்திர சந்தானம் கல்வி திருமணம் உள்ளிட்ட சுப காரியங்கள் சிறப்பாக அமைய சிறப்பு பூஜை நடைபெற்றது இதில் ஏராளமானோர் மாணவ மாணவிகள் பெண்கள் திரளாக கலந்து கொண்டு சாமிய தரிசனம் செய்தனர் தொடர்ந்து கல்வி கற்க்கு மாணவர்களுக்கு கல்வி



உபகரணங்கள் வழங்கப்பட்டது தொடர்ந்து பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது இந்த நிகழ்ச்சிக்கான ஏற்பா டுகளை ஸ்ரீ வக்ரகாளியம்மன் ஆலயம் குரு சிவஸ்ரீ கணேசன் செய்திருந்தனர்

# சிவகங்கை மாவட்ட கவனகக்கலை மன்றம் சார்பில் முப்பெரும் விழா

காரைக்குடி, அக்.06-

சிவகங்கை மாவட்டக் கவனகக்கலை மன்றம் நடத்தும் கல்வியாளர்கள் சங்கமம் முப்பெரும் விழா காரைக்குடியில் நடைபெற்றது...

உலக ஆசிரியர் தினத்தை முன்னிட்டு கல்விப் பணியிலும் சமுதாயப் பணியிலும் சிறந்து விளங்கும் கல்வியாளர்களுக்கும் , சமூக செயற்பாட்டாளர்களுக்கும் விருதுகள் வழங்கப்பட்டது...

ஐந்தாம் ஆண்டு கல்விச்சுடர், சேவைச்சுடர், 2025 ஆம் ஆண்டிற்கான விருது வழங்கும் நிகழ்ச்சி, நல்லாசிரியர் சேவு. முத்துக்குமார் எழுதிய நூல்கள் வெளியீட்டு விழா மற்றும் கவனகக்கலை மன்றத்தின் 10 வது ஆண்டு விழா என முப்பெரும் விழா காரைக்குடி கவியரசர் கண்ணதாசன் மணிமண்டபத்தில் நடைபெற்றது.

கவனகக்கலை மன்ற செயலாளர் முனைவர் ஜெ. பிரகாஷ்மணிமாறன் வரவேற்புரையாற்றிட அறிமுக உரையாக 2024 ஆண்டின் தமிழ்நாடு அரசின் டாக்டர் இராதாகிருஷ்ணன் விருதாளர், இலட்சிய ஆசிரியர் சேவு. முத்துக்குமார் உரையா ற்றினார்.




காரைக்குடி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் எஸ். மாங்குடி நிகழ்ச்சிக்கு தலைமையேற்று உரை நிகழ்த்தினார்...

சேவைச்சுடர் ராயல் புரமோட்டர்ஸ் முத்துராமலிங்கம், ஜெய்னிகா சிவக்குமார், பொறியாளர் ஜெயச்சந்திரன் , கார்ணர் பேக்கரி பிரதீப் மாணிக்கம், அரிமா அழகுசுந்தரம், பரிபூரண கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் பரிபூரண ஆனந்த், காரைக்குடி ஸ்டீல்ஸ் சண்முகநாதன் , நேஷனல் கேட்டரிங் அரிமா சையது , தாயுமானவர் முதியோர் இல்லம் மருத்துவர் ஆனந்தி தங்கவேல், உதவும் கரங்கள் , அறங்காவலர் முருகப்பன் ஆகியோர் முன்னிலை வகித்திட அழகப்பா பல்கலைக்கழக துணை வேந்தர் முனைவர் ஜி. ரவி சிறப்பு அழைப்பாளராகக் கலந்து கொண்டு விருதுகளை வழங்கினார்... ,

இந்த நிகழ்ச்சியில் பல்கலைக்கழக மேனாள் துணை வேந்தர் முனை வர் சுப்பையா, தமிழ்த் துறைத் தலைவர் பாகை. கண்ணதாசன், காரைக்குடி மருத்துவமனை நிர்வாக இயக்குநர் , சிவகங்கை மாவட்ட திமுக மருத்துவரணி அமைப்பாளர் மருத்துவர் வி. குமரேசன் , விஜய் டிவி புகழ் கவிஞர் இராகவேந்திரன் , மாமன்ற உறுப்பினர் ஆகா. பிரகாஷ் , திருக்குறள் திலீபன் , துணைத்தலைவர் இராதாகிருஷ்ணன் , இலட்சிய ஆசிரியை யாஸ்மின் பரிதா ,கவனகக்கலை மன்ற பொருளாளர் கண்ணன் உள்ளிட்ட நிர்வாகிகள் மற்றும் நூற்றுக்கும் மேற்பட்ட விருதாளர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்...

இதனிடையே சிறந்த சமூக சேவைக்கான விருதினை மாண்புமிகு அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் அவர்களது புகைப்படக் கலைஞன் தனியார் தினசரி நாளிதழின் சிவகங்கை மாவட்ட புகைப்படக் கலைஞர் மெர்குரி தனபால் வழங்கி கௌரவிக்கப்பட்டது...

விருதினைப் பெற்ற மெர்குரி தனபால் அவர்கள் டெல்டா மாவட்டத்தில் திருவாரூர் மாவட்டம் திருத்துரைப்பூண்டியில் பிறந்திருந்தாலும் திமு கழகத்தின் பால் கொண்ணிருந்த பற்றினாலும், மாண்புமிகு அமைச்சர் மாவட்டக்கழக செயலாளர் கே.ஆர். பெரியகருப்பன் அவர்களின் பால் மிகுந்த அன்பும் கொண்டிருந்த காரணத்தால் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தனிப்பட்ட சொந்த புகைப்படக் கலைஞனாக வலம் வந்து கொண்டிப்பவர்...

அமைச்சர் அவர்கள் மூலமாக கழக துணைப் பொதுச்செயலாளர், நாடாளுமன்ற உறுப்பினர் கவிஞர் கனிமொழி அவர்களின் ஆசியைப் பெற்று இன்றைக்கு மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் , தமிழ்நாட்டின் கழக மாவட்ட செயலாளர்கள், சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள் என தமிழ்நாடு முழுவதும் அனைவரின் அன்பையும் பெற்று வலம்வரும் மெர்குரி என்று எல்லோராலும் அன்போடு அழைக்கப்படும் மெர்குரி தனபால் அவர்களுக்கு சேவைச்சுடர் விருது வழங்கி சிறப்பித்தனர்...

இந்த நிகழ்ச்சியின் இறுதியில் சங்கத்தின் பொருளாளர் மீ. கண்ணன், கௌரவத் தலைவர் ம. தங்கச்சாமி ஆகியோர் நன்றி கூறினர்...

நிகழ்ச்சி ஏற்பாடுகளை சிவகங்கை மாவட்ட கவனகக்கலை மன்றத்தினர் சிறப்பாக செய்திருந்தனர்.

# அண்ணாமலை திடீர் டெல்லி பயணம்



சென்னை, அக்.06-

மாநில பாஜக முன்னாள் தலைவர் அண்ணாமலை திடீர் பயணமாக கோவையில் இருந்து டெல்லி புறப்பட்டுச் சென்றார்.

கரூரில் நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்த சம்பவம் தொடர்பாக, பாதிக்கப்பட்டவர்களை சந்தித்து பாஜக முன்னாள் மாநில தலைவர் அண்ணாமலை ஆறுதல் கூறியதுடன் சம்பவ இடத்தையும் பார்வையிட்டார்.

கரூருக்கு வந்த பாஜக எம்.பி.க்கள் விசாரணை குழுவுடனும் அண்ணாமலை சென்று ஆய்வு மேற்கொண்டார். இந்த நிலையில் திடீரென நேற்று கோவையில் இருந்து விமானத்தில் டெல்லி புறப்பட்டுச் சென்றார். அங்கு அவர், அமித் ஷா மற்றும் பாஜக தேசிய அமைப்பு பொதுச்செயலாளர் பி.எல்.சந்தோஷ் ஆகியோரைச் சந்திக்க திட்டமிட்டுள்ளதாகத் தெரிகிறது.

அப்போது தமிழக அரசியல் சூழ்நிலை குறித்து ஆலோசிக்க இருப்பதாகக் கூறப்படுகிறது.

# திருப்பதி ஊழியர்கள் பற்றி நிர்வாக அதிகாரி சிங்காலிடம் பக்தர்கள் புகார்

திருமலை, அக்.06-

திருமலையில் உள்ள அன்னமைய்யா பவனில் நேற்று முன்தினம் பக்தர்களிடம் தேவஸ்தான நிர்வாக அதிகாரி அணில்குமார் தொலைபேசி மூலம் குறைகளை கேட்டறியும் நிகழ்ச்சி நடந்தது.

அப்போது, 23 பக்தர்கள் வெவ்வேறு பகுதிகளில் இருந்து தொலைபேசி மூலம் தங்களது குறைகளை நிர்வாக அதிகாரிக்கு எடுத்துரைத்தனர். அப்போது கடப்பாவிலிருந்து ஸ்ரீநிவாசுலு எனும் பக்தர் "ரூ.300 சிறப்பு தரிசன ஆன்லைன் டிக்கெட்டுகளை மட்டும் தனியாக ஒரு நாளில் வழங்கப்பட வேண்டும்" என கேட்டுக் கொண்டார். இதுகுறித்து பரிசீலிக்கப்படும் என அதிகாரி தெரிவித்தார்.

திருப்பூரில் இருந்து நாகேஸ்வர ராவ் எனும் பக்தர் "கோயிலுக்குள் சில தேவஸ்தான ஊழியர்கள் தரக் குறைவாக நடந்து கொள்கின்றனர். அவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்'' என பேசினார்.

# பணிகள் முடிந்து 8வருடங்கள் ஆகியும் இன்னும் திறக்கப்படாத கழிப்பறைகள்

## குருந்தன்கோடு ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட இந்திரா நகர் காலனி மக்களுக்கு 2018 ம் ஆண்டு கட்டப்பட்ட கழிப்பறைகள் இன்னும் திறக்கப்படவில்லை என குற்றச்சாட்டு

கன்னியாகுமரி, அக்.06-

கன்னியாகுமரி மாவட்டம் குருந்தன்கோடு ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட இந்திரா நகர் காலனி மக்களுக்கு சுகாதார வசதிக்காக கடந்த 2018ஆம் ஆண்டு ஆதி திராவிடர் பிற்படுத்தப்பட்டோர் இந்திரா நகர் காலனி மக்களுக்கு கிராமப்புற தூய்மை பாரத இயக்கம் திட்டத்தின் கீழ் ரூபாய் 2 லட்சம் மதிப்பீட்டில் 5 பொது கழிப்பறைகள் கட்டி முடிக்கப்பட்டது. ஆனால் இன்று வரை திறக்கப்படாமல் பூட்டி வைக்கப்பட்டுள்ளது. இது குறித்து அதிகாரிகளிடம் கேட்டபோது இன்னும் தண்ணீர் இணைப்பு கொடுக்கவில்லை என அலட்சியமாக பதிலளிக்கின்றனர்.

ஆதிதிராவிட பிற்படுத்தப்பட்டோர் நலனுக்காக அரசு பல நலத்திட்டங்கள் வழங்கியும் அது எங்களுக்கு முழுமையாக கிடைக்கவில்லை. இதுபோன்று பூட்டி வைக்கப்பட்டுள்ளதால் அரசுக்கும் பயனில்லை எங்களுக்கும் பிரயோஜனம் இல்லை என பொதுமக்கள் வேதனையுடன் தெரிவிக்கின்றன. பொதுமக்கள் தினமும் பயன்படுத்தும் அத்தியாவசியமான கழிவறைகளுக்கு இவ்வளவு காலதாமதமா என சமூக ஆர்வலர்கள் கேள்வி.



மாவட்ட நிர்வாகம் உடனடியாக இந்த பகுதியினை பார்வையிட்டு கழிவறைகளை திறந்து எங்களுக்கு பயன்படுத்த ஏற்பாடு செய்ய வேண்டுமென இந்திரா நகர் காலனி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்..

# முடிச்சூர் ஊராட்சி கழக சார்பில் மாபெரும் தெருமுனை கூட்டம் மற்றும் சுமார் 600 நபர்களுக்கு நலத்திட்ட உதவி வழங்கும் விழா நடைபெற்றது

செங்கல்பட்டு, அக்.06-

செங்கல்பட்டு மாவட்டம் பரங்கிமலை மேற்கு ஒன்றிய முடிச்சூர் ஊராட்சி கழக சார்பில் கழகப் பொதுச் செயலாளர் முன்னாள் முதலமைச்சர் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் டாக்டர் எடப்பாடி யார் அவர்களின் ஆணைக்கிணங்க பரங்கிமலை மேற்கு ஒன்றிய அம்மா பேரவை இணைச் செயலாளர் டி.வி.ஆர் வெங்கட்ராமன் அவர்களின் தலைமையில் பரங்கிமலை மேற்கு ஒன்றிய கழகச் செயலாளர் மதுரபாக்கம் எம்பி மனோகரன் முன்னிலையில் முடிச்சூரில் மாபெரும் தெருமுனை கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவி வழங்கும் விழா சிறப்பாக நடைபெற்றது

இதில் சிறப்பு அழைப்பாளராக கழக



மகளிர் அணி துணைச் செயலாளர் தலைமை கழக பேச்சாளரும் அமுதா அருணாச்சலம், செங்கல்பட்டு மேற்கு மாவட்ட கழக செயலாளர் சிட்லபாக்கம் ச.ராஜேந்திரன், அனைத்து உலக எம்ஜிஆர் மன்ற தலைவர் முன்னாள் அமைச்சர் டி.கே.எம் சின்னையா ஆகியோர் கலந்து கொண்டு விடியா திமுக அரசு பதிவேற்ற நாளிலிருந்து தமிழகத்தில் சட்ட ஒழுங்கு சீர்கேடுகள் விலைவாசி உயர்வு பெண்களுக்கு பாதுகாப்பு இளைஞர்களை சீரழிக்கும் போதைப்பொருள் கலாச்சாரம் என பல வகைகளில் சீர்கேடு கலை எடுத்துக் கூறி சிறப்பு உரையாற்றி சுமார் 600 நபர்களுக்கு நல திட்ட உதவி வழங்கினார்கள்

இந்த நிகழ்ச்சியில் ஜே.குணசேகரன், வழக்கறிஞர் சரவணன், கே.பத்மநாபன், தவமணி, முடிச்சூர் ஊராட்சி கிளைக் கழக செயலாளர்கள் நாராயணன், ராஜேந்திரன், சாந்தகுமார், முருகானந்தன், கணேசன், ஹரி, கஜேந்திரன், கேசவன், குமார், நந்தகோபால், ஆதி கேசவன், மணிவேல், ராஜா, பிரபாகரன், வெங்கடேசன், ராஜேஷ், ஆறுமுகம், ஜோசப் பூத் செயலாளர் ஜெயக்குமார், முடிச்சூர் ஊராட்சி மகளிர் அணி நிர்வாகிகள் லலிதா, கற்பகம் சீனிவாசன், சரளா, விஜயராணி, பூத் கமிட்டி பொறுப்பாளர்கள் மற்றும் செயலாளர்கள் ஜெயக்குமார், பாக்கியராஜ், யோகேஸ்வர், ஸ்ரீ பாஸ்கர், ராஜேந்திரன், செந்தில்குமார், பிரபு, குமார், பார்த்திபன், சந்திரசேகர், குரங்கு பாபு, தாஸ், கார்த்திகேயன், வினோத்குமார், மற்றும் மாவட்டம் கழக நிர்வாகிகள் ஒன்றிய கழக நிர்வாகிகள் முடிச்சூர் ஊராட்சி கழக நிர்வாகிகள் சார்பு நிர்வாகிகள் பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர்

இறுதியில் முடிச்சூர் மாவட்ட பிரதிநிதி ஏ.அருள், பரங்கிமலை மேற்கு ஒன்றிய எம்ஜிஆர் மன்ற இணைச்செயலாளர் முன்னாள் முடிச்சூர் ஊராட்சி மன்ற துணைத் தலைவர் சசிகலா கல்கி நன்றி உரையாற்றினார்

# பழனியில் கஞ்சா விற்பனையில் ஈடுபட்ட 6 இளைஞர்களை போலீசார் கைது செய்து சிறையில் அடைத்தனர்

திண்டுக்கல், அக்.06-

திண்டுக்கல் மாவட்டம் பழனி மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளில் கஞ்சா விற்பனை அதிகரித்துள்ளதாக புகார் எழுந்தது. இதையடுத்து பழனி டிஎஸ்பி தனஞ்ஜெயன் உத்தரவின் பேரில் பழனி உட்கோட்ட காவல் எல்லைகளுக்கு உட்பட்ட பகுதிகளில் போலீசார் தீவிர ரோந்து பணியில் ஈடுபட்டு வருகின்றனர். இதன்படி பழனி நகர சார்பு ஆய்வாளர் விஜய் தலைமையிலான போலீசார் பழனி நகர் பகுதியில் கண்காணிப்பில் ஈடுபட்டிருந்தனர். அப்போது பழனி அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி பின்புறம் சந்தேகத்திற்கிடமாக சுற்றித்திரிந்த நபர்களை பிடித்து விசாரித்தனர். அப்போது அங்கு



நின்றிருந்த 6 இளைஞர்களிடம் விசாரணை நடத்தியதில் அவர்களிடம் கஞ்சா இருந்தது தெரியவந்தது .

தொடர்ந்து நடத்திய விசாரணையில் பழனி நகர் பகுதியை சேர்ந்த பிரபு, பரத்ராஜ், ஹரி பிரசாத், முக கரியா. கோகுல், தியாகராஜன் ஆகிய 6பேரும் கஞ்சா விற்பனை செய்தது தெரிய வந்தது. இதையடுத்து 6பேரையும் போலீசார் கைது செய்தனர். அவர்களிடம் இருந்து 100 கிராம் அளவிலான கஞ்சா மற்றும் மூன்று மோட்டார் சைக்கிள்களை பறிமுதல் செய்தனர். பஅவர்கள் மீது வழக்கு பதிவு செய்து நீதிமன்ற காவலில் சிறையில் அடைக்கப்பட்டனர்

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161